# 5 புத்தகம் பேசுகிறது

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள் என்பதால் கமலினி தனது அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது பழைய பெட்டியில் ஏதோ சத்தம் கேட்டது. கமலினி பெட்டியைத் திறந்து பார்த்தாள்; எலிகள் வெளியே ஓடின. கமலினி புத்தகம் ஒன்றை எடுத்தாள். அப்பழைய புத்தகம் பேசத் தொடங்கியது.

தற்பொழுது எனக்கு முப்பது வயது. இங்கு எனக்கு உறக்கமோ நிம்மதியோ கிடையாது. தினமும் எலிகள் தம் கூரிய பற்களால் என்னை அங்கம் அங்கமாகக் கொறிக்கின்றன. கறையான்கள் என் உடலில் ஒட்டி இரத்தத்தை உறிஞ்சுகின்றன. எனது இன்றைய நிலை மிகப் பரிதாபத்துக்குரியதாக இருந்தாலும் எனது கடந்தகால வாழ்க்கை மிகவும் சுவாரஸ்யமானது.



நான் உங்கள் வாழ்க்கையுடன் தொடர்புபட்டவன் என்பதால் என் கதையை உங்களுக்குக் கூறுகின்றேன். அப்போதுதான் எனக்கு ஆறுதல் கிடைக்குமென நினைக்கின்றேன். மக்களுக்குச் சேவை செய்பவர்களுக்கு இந்நிலை வருவதை அனுமதிக்க முடியாது. நீங்களாவது இந்த நிலையினை மாற்ற வேண்டுகின்றேன்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

நான் இந்தியாவில் தமிழ் நாட்டில் சென்னை மாநகரில் பாரதி அச்சகத்தில் பிறந்தேன். தனது வாழ்க்கையைக் கவிதையாக எழுதிய எழுத்தாளர் என்னைப் புத்தகமாக ஆக்கினார். அன்று நான் ஆயிரக்கணக்கான நண்பர்களுடன் நல்ல கவர்ச்சியான அட்டைப்படத்துடன் வெளியானேன். எனது பெயர் 'கவிதைப் பூங்கா.' சகோதரர் பலருடன் விமானமூலம் இலங்கைக்கு வந்தேன்.

நான் விற்பனைக்காகவே உருவாக்கப்பட்டவன்; ஆகையால் என்னைச் சகாக்களுடன் சேர்த்துக் கடைக்குக் கொடுத்தார்கள். கடையில் கண்ணாடி அலுமாரியில் குதூகலமாக இருந்தேன். எனது அதிர்ஷ்டம் அதிக நாட்கள் அங்கு நான் இருக்கவில்லை.

ஆசிரியர் ஒருவர் என்னை விலை கொடுத்து வாங்கினார். முப்பது வருடங்கள் அவருடன் சௌக்கியமாக வாழ்ந்தேன். அவர் என்னைப் பாதுகாப்பாகவும் கண்ணியமாகவும் பயன்படுத்தினார். என்னை வாசிக்குமாறு பல நண்பர்களுக்குக் கொடுப்பார். என்னைப் புரட்டிப் பார்க்காத அவரது மாணவர்களே இல்லை. பல நல்ல கருத்துள்ள கவிதைகளைச் சுமந்திருந்த நான், கிடைப்பதற்கு அரிய பொருளாக மதிக்கப்பட்டேன்.

இன்று அந்நிலை மாறிப் பழைய புத்தகம் என்ற பெயரில் மிகுந்த வேதனையை அனுபவிக்கின்றேன்.இந்நிலைக்குக் காரணம் எனது எஜமானின் நண்பரில் ஒருவர் என்னை இரவலாக பெற்றுச் சென்றார். எடுத்துச் சென்றவர் திருப்பி ஒப்படைக்கவில்லை. ஒரு நாள் அவர் என்னைப் படித்துவிட்டு கவனயீனமாக, இருந்த இடத்திலே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அப்போது அவரது சின்ன மகள் தனது சின்னக் கைகளால் என்னைக் கிள்ளி விளையாடினாள். மூத்த மகன் ராஜா கத்தரிக்கோலால் வெட்டி விளையாடினான். அதைக் கண்ட அவன் தாய் ஓடி வந்து என்னை அள்ளி அணைத்தாள். அந்த அம்மையாரின் ஆதரவுதான் இன்று வரை என்னை இந்நிலையிலேனும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. என்னை இப்போது ஒருவரும் வாசிப்பது இல்லை.

எனக்கொரு உறையிட்டு சிறிய அலுமாரியில் வைத்துப் பாதுகாத்தால் உங்கள் சந்ததிகளுக்கும் என்னால் உதவ முடியும். நீங்களாவது நான் மறுபிறவி எடுக்க வழி செய்வீர்களா?


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கம் | - | අවයව |
| 2. | கொறிக்கின்றன | - | ලැටිගානවා |
| 3. | பரிதாபம் | - | අනුකම්පා |
| 4. | சுவாரஸ்யம் | - | රසවත් |
| 5. | ஆறுதல் | - | සැනසීම |
| 6. | அச்சகம் | - | මුද්‍රණාලය |
| 7. | எழுத்தாளர் | - | ලේඛකයා |
| 8. | சகாக்கள் | - | සගයා |
| 9. | குதூகலம் | - | ප්‍රීතිය |
| 10. | எஜமான் | - | හාම්පුතා |
| 11. | அட்டைப்படம் | - | පිට කවර පිංතූර |
| 12. | சௌக்கியம் | - | සැප |
| 13. | கண்ணியம் | - | ගරුත්වය |
| 14. | புரட்டி | - | පෙරලා |
| 15. | இரவல் | - | අයදිනවා |
| 16. | ஒப்படைத்தல் | - | භාරදීම |
| 17. | கவனயீனம் | - | නොසැලකිල්ල |
| 18. | சந்ததி | - | පරම්පරාව |
| 19. | மறுபிறவி | - | පුනර්භවය |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. பாடத்தில் வரும் புத்தகத்தின் பெயர் என்ன?
2. தான் எவ்வாறு பழையதாக மாறியதாகக் கூறியது?
3. பழைய புத்தகம் எங்களிடம் எதிர்பார்ப்பது யாது?
4. புத்தகங்களைப் பாதுகாக்க நீர் கூறும் ஆலோசனைகள் இரண்டு எழுதுக.
5. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
   அ. அங்கம் (ஆ) குதூகலம் (இ) கண்ணியம்

### செயற்பாடு - I

**பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களாக்கி ஒரு சுயசரிதை எழுதத் தொடங்குவோம்.** පහත සඳහන් වචන ගලපා වාක්‍ය සාදා ජීවිත කථාව ලිවීමට පටන් ගනිමු.

1. இந்தியாவில் / தயாரிக்கப்பட்டேன் / நான்
2. என / வாகனம் / அழைப்பார்கள் / ஏழைகளின் / என்னை
3. மக்களுக்கும் / நான் / உதவுவேன் / எல்லா
4. ஓடுவேன் / நான் / வீதிகளில்

உதாரணம் :-

எனது பெயர் துவிச்சக்கர வண்டி

1. ..........................................................................
2. ..........................................................................
3 ..........................................................................
4. ..........................................................................


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - II

- உங்களைப் பற்றி உங்கள் நண்பருக்குக் கூறுங்கள்.
  **ඔබ ගැන ඔබේ යහළුවාට කියන්න.**

## செயற்பாடு - III

- பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைப் பற்றி 100 சொற்களில் சுயசரிதை எழுதுங்கள். **පහත සඳහන් මාතෘකාවලින් එකක් ගැන වචන 100ක ජීවිත කථාවක් ලියන්න.**

(அ) வாழை மரம் தன் கதை கூறல்
(ஆ) கிழிந்த பட்டாடை பேசுகிறது.

## அழைப்பிதழ்

**இளையவனின்**

**"சொல்வதெல்லாம் உண்மை"**

கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

**இடம்** :- பிரதான மண்டபம்
ப / வெலிமடை த. ம. வி.

**திகதி** :- 03. 01. 2010

**நேரம்** :- பி. ப. 2. 00 மணி

**தலைமை** :- கவிஞர் யதார்த்தன்

ஒரு மாலைப் பொழுதை இனிமையாகக் கழித்து மகிழ்ந்திட அனைவரும் திரண்டு வாருங்கள்.

ஏற்பாடு
கலை இலக்கிய வட்டம்,
வெலிமடை.

## செயற்பாடு - IV

i. இங்கு கூறப்பட்ட அழைப்பிதழ் எதனைப் பற்றியது ?

ii. இந்நிகழ்வு நடைபெறும் இடம் எது?

iii. இல்ல விளையாட்டுப் போட்டி தொடர்பான அழைப்பிதழ் ஒன்றைத் தயாரியுங்கள்.

## இலக்கணம்

### இடம்

- **தன்மை**
  - நான்
  - நாங்கள்
  - நாம்
- **முன்னிலை**
  - நீ
  - நீங்கள்
- **படர்க்கை**
  - அவன்
  - அவள்
  - அவர்
  - அவர்கள்

## வினை விகுதிகள்

நான் < குடித்தேன், குடிக்கிறேன், குடிப்பேன் > ஏன்

நாங்கள் < குடித்தோம், குடிக்கிறோம், குடிப்போம் > ஓம்

நீ < குடித்தாய், குடிக்கிறாய், குடிப்பாய் > ஆய்

நீங்கள் < குடித்தீர்கள், குடிக்கிறீர்கள், குடிப்பீர்கள் > ஈர்கள்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

| | | |
|---|---|---|
| இவன்<br>அவன்<br><br>கமால், விமல்.<br>ரகு, குமார், ரவி, | குடித்தான்<br>குடிக்கிறான்<br>குடிப்பான் | ஆன் |
| இவள்<br>அவள்<br><br>கமலா, லலிதா<br>ரமணி, மாலினி, தினுரி | குடித்தாள்<br>குடிக்கிறாள்<br>குடிப்பாள் | ஆள் |
| இவர்<br>அவர்<br><br>அப்பா,மாமா,ஆசிரியர்,<br>அதிபர்,தாத்தா | குடித்தார்<br>குடிக்கிறார்<br>குடிப்பார் | ஆர் |
| இவர்கள்<br>அவர்கள்<br><br>கமலும் விமலும்<br>அப்பாவும் தம்பியும்<br>ரவியும் ராகுவும் கண்ணனும் | குடித்தார்கள்<br>குடிக்கிறார்கள்<br>குடிப்பார்கள் | ஆர்கள் |
| அது<br>இது | குடித்தது<br>குடிக்கிறது | அது |
| அவை,அவைகள்,<br>இவை, இவைகள் | குடித்தன<br>குடிக்கின்றன | அ |

## எதிர்காலம் ஏற்கும் போது

அது
இது
அவை, அவைகள், இவை, இவைகள்
→ குடிக்கும் — உம்

## செயற்பாடு - V

**பயனிலைச் சொற்களுக்குப் பொருத்தமான எழுவாயைத் தெரிவு செய்து அவற்றின் இலக்கங்களை அடைப்புக் குறிக்குள் எழுதுவோம்.**

| | எழுவாய் | | பயனிலை |
|---|---|---|---|
| 1. | நான் | (   ) | ஆடினார்கள் |
| 2. | நாங்கள் | (   ) | ஆடியது |
| 3. | நீ | (   ) | ஆடின |
| 4. | நீங்கள் | (   ) | ஆடினான் |
| 5. | அவன் | (   ) | ஆடினாள் |
| 6. | அவள் | (   ) | ஆடினேன் |
| 7. | அவர் | (   ) | ஆடினாய் |
| 8. | அவர்கள் | (   ) | ஆடினோம் |
| 9. | அது | (   ) | ஆடினீர்கள் |
| 10. | அவை | (   ) | ஆடினீர் |

## செயற்பாடு - VI

**பொருத்தமான எழுவாய்ச் சொல்லைத் தெரிவு செய்து வாக்கியத்தில் உள்ள இடைவெளிகளைப் பூரணப்படுத்துவோம்.**

(அவர்கள், மாணவர்கள், பூனை, நான், நாங்கள்,)

1. .............................. வயலை உழுதேன்.
2. .............................. பாலை விரும்பிக் குடித்தது.
3. .............................. மைதானத்தில் விளையாடினார்கள்.
4. .............................. அழகாக நடனம் ஆடினோம்.
5. .............................. நன்றாகப் பாடினார்கள்.

## செயற்பாடு - VII

**பொருத்தமான பயனிலைச் சொற்களைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துவோம்.**

(படிப்பித்தார், விளையாடுகின்றார், செல்வாயா?, கட்டினார், செய்வீர்களா?, வீழ்த்தியது, படிக்கின்றேன், அலைந்தன, வருவார்கள், சென்றோம்)

1. நான் இன்று தமிழ் ..........................................
2. நாங்கள் நேற்றுக் கோவிலுக்குச்........................................
3. நாளை பாடசாலைக்குச் ..........................................
4. கமலன் மைதானத்தில் ..........................................



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

5. ஆசிரியர் நன்றாகத் தமிழ் ......................................

6. கமலவாணி அழகாகப் பூமாலையைக்......................................

7. நீங்கள் வீட்டு வேலையைச் ......................................

8. யானை பெரிய மரத்தை ......................................

9. மிருகங்கள் தண்ணீர் தேடி ......................................

10. நண்பர்கள் எங்கள் வீட்டுக்கு ......................................

## செயற்பாடு - VIII

**பின்வரும் அட்டவணையை நிரப்புவோம்.**
**පහත සඳහන් වගුව පුරවමු.**

| வினைச் சொற்கள் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| வந்தான் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை |
| கொடுப்பார் | ......................... | ................. | ................... | ................. |
| விளையாடினாள் | ......................... | ................. | ................... | ................. |
| அழைத்தார் | ......................... | ................. | ................... | ................. |
| ஓடின | ......................... | ................. | ................... | ................. |
| பார்த்தான் | ......................... | ................. | ................... | ................. |
| உறிஞ்சுகின்றன | ......................... | ................. | ................... | ................. |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக